# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 06 | விஞ்ஞானம்<br>சுட்டெண் : ............................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|


### பகுதி - I

**01. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. பின்வருவனவற்றுள் சுவட்டு எரிபொருள் எது?
   1) விறகு 2) நிலக்கரி
   3) உமி 4) மரத்தூள்

02. மூன்று பௌதிக நிலைகளிலும் காணப்படக் கூடியது
   1) மண் 2) உப்பு
   3) நீர் 4) பால்

03. இங்கு காணப்படும் நுண்ணங்கி




   1) பக்ரீறியா 2) வைரசு
   3) பரமேசியம் 4) கிளமிடோமொனசு

Education கல்வி அத்யாபன

04. ஒளித்தொகுப்பிற்கு பயன்படுத்தப்படும் வாயுவையும் ஒளித்தொகுப்பின் போது வெளிவிடப் படும் வாயுவையும் முறையே குறிப்பது
   1) காபனீரொட்சைட்டு வாயு, ஒட்சிசன் வாயு 2) ஐதரசன் வாயு, ஒட்சிசன் வாயு
   3) ஒட்சிசன் வாயு, ஐதரசன் வாயு 4) நைதரசன் வாயு, ஐதரசன் வாயு

05. படத்தில் காட்டப்பட்டிருப்பது



   1) தாவரங்களின் கழிவகற்றல் செயன்முறை.
   2) தாவரத்தின் இடம்பெயர்வு.
   3) தாவரத் தண்டின் அசைவு.
   4) தாவர இனப்பெருக்கம்

06. படிவு வீழ்ச்சிக்கு உதாரணமாக அமைவது
   1) மழை 2) ஏரிகள்
   3) தடாகங்கள் 4) ஊற்றுக்கள்

07. சவர்நீர் காணப்படும் இடம்
   1) சமுத்திரம் 2) நீர்வீழ்ச்சி
   3) தடாகங்கள் 4) கழிமுகங்கள்

08. ஒளிராப் பொருள் எது?
   1) சூரியன் 2) சந்திரன்
   3) மின்மினிப்பூச்சி 4) ஒளிரும் மின்குமிழ்



kalvi.lk

09. ஒளிக்கு உறுத்துணர்ச்சியுடைய புலனங்கம்

1) வாய்  2) மூக்கு
3) கண்  4) காது.

10. வலிமையான காந்தங்களை அமைக்கப் பயன்படும் திரவியம்

1) பெரைற்று  2) உருக்கு
3) காபன்  4) பித்தளை

(10 × 2 = 20 புள்ளிகள்)

**02. பின்வருவன சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

01. செப்புத் தகட்டினூடாகப் பார்க்கும் போது எதிரேயுள்ள மெழுகுதிரிச் சுவாலை தெரியும். (     )

02. திசைகாட்டி மூலம் காந்தத்தின் முனைவுகளை இனங்காண முடியும். (     )

03. கிற்றாரிலும் சங்கிலும் ஒரே விதத்தில் ஒலி உருவாக்கப்படுகிறது. (     )

04. கடலிலுள்ள நீர் சவர்நீர் ஆகும். (     )

05. சூரியப்படல் மூலம் மின் பெறப்படும் போது சூழல் மாசடைவதில்லை. (     )

(5 × 2 = 10 புள்ளிகள்)

**03. கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.**

**(சோடியம் குளோரைட்டு, ஒளித்தொகுப்பு, தெளிந்த சுண்ணாம்பு நீர், ஒளியியல் நார், அமுக்கத்திற்கும்)**

01. தாவரங்கள் தமக்கு வேண்டிய உணவை ........................................ மூலம் தயாரித்துக் கொள்கின்றன.

02. நிலத்தினுள் புதைந்து போன தாவர விலங்குப் பகுதிகள் புவியினுள்ளே அதிக வெப்பத்திற்கும் ........................................ உட்பட்டு சுவட்டு எரிபொருட்கள் உருவாகின்றன.

03. உப்பளங்களில் கடல்நீர் ஆவியாக்கப்பட்டு ........................................ பெறப்படுகிறது.

04. அகங்காட்டியில் ........................................ பயன்படுத்தப்படுகிறது.

05. காபனீரொட்சைட்டு வாயுவை ........................................ மூலம் இனங்காணலாம்.

(5 × 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

பகுதி - II


எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. அன்றாட வாழ்வில் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல சக்தி முதல்கள் பயன் படுத்தப்படுகின்றன.


1) நாம் பயன்படுத்தும் சக்தி முதல்களில் முதன்மையான சக்தி முதல் எது?

.......................................................................................................

2)



A



B

A, B என்பவற்றைப் பெயரிடுக.

A - ..................................................... B - .....................................................

3) Aயின் பயன்பாடு யாது?

.......................................................................................................

.......................................................................................................

4) Bயில் சூரியனிலிருந்து பெறப்படும் எச் சக்தி பயன்படுத்தப்படுகிறது?

.......................................................................................................

5) அன்றாட வாழ்வில் உபகரணம் B பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

.......................................................................................................

.......................................................................................................

6) கீழ் தரப்படும் சந்தர்ப்பங்களில் பயன்படும் சக்தி முதல்கள் ஒவ்வொன்று தருக.

| | செயற்பாடு | சக்தி முதல் |
|---|---|---|
| a) | மின்குமிழ் ஒளிர்தல் | ..................................... |
| b) | மோட்டார் வண்டி இயங்குதல். | ..................................... |
| c) | நெல்லிலிருந்து பதர்களை வேறாக்குதல் | ..................................... |
| d) | உணவு சமைத்தல். | ..................................... |
| e) | ஆடைகள் அழுத்துதல் | ..................................... |



kalvi.lk

7) மின்சக்தியைப் பெறுவதற்குப் பயன்படுத்தக் கூடிய சக்திமுதல்கள் இரண்டு தருக.

1) .................................................. 2) ..................................................

8) எமது நாட்டில் நீர்மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள இடம் ஒன்று தருக.


..................................................................................................................................

9) வீட்டில் மின்சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று தருக.

..................................................................................................................................

(1+ 2 +1+ 1+ 2 + 5 + 2 + 1 + 1 = 16 புள்ளிகள்)

**02. A. விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருவர் மேற்கொண்ட செய்முறை ஒழுங்கமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது.**




Education கல்வி அധ്യാപന

1) மேல் காட்டப்பட்ட ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டதன் நோக்கம் யாது?

..................................................................................................................................

2) கடதாசி அட்டைகள் A, B, C மூன்றிலுமுள்ள துவாரங்கள் நேராக உள்ளபோது கடதாசி அட்டை Cயினூடாக மெழுகுதிரிச் சுவாலையை அவதானிக்க முடியுமா?

..................................................................................................................................

3) கடதாசி அட்டை B ஐ சற்று நகர்த்தி வைத்தபின் அட்டை Cயினூடாக அவதானிக்கும் போது மெழுகுதிரிச் சுவாலை தெரியுமா? உமது விடைக்கான காரணம் யாது?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

4) ஒளிக்கதிர் ஒன்றினை வரைக.

..................................................................................................................................

(1+ 1 + 2 + 1 = 05 புள்ளிகள்)




kalvi.lk

B. மேற்படி செய்முறை ஒழுங்கமைப்பு கீழே படத்தில் காட்டியவாறு மாற்றியமைக் கப்பட்டு ஒவ்வோர் பரிசோதிக்கும் பொருளும் ஒவ்வொன்றாக வைக்கப்பட்டு துளை யினூடாக மெழுகுதிரிச் சுவாலை அவதானிக்கப்பட்டது.

பரிசோதிக்கும் பொருட்கள்

a) உலோகத்தகடு
b) மெல்லிய கண்ணாடி
c) கறுப்புக் கடதாசி
d) பொலித்தீன் பை
e) ரிசு தாள்
f) எண்ணெய் பூசிய கடதாசி




நீர் பெற்ற அவதானத்திலிருந்து தரப்பட்ட பொருட்களில்

1) ஒளி ஊடுகாட்டும் பொருட்கள் எவை?

.................................................................................................

2) ஒளி ஊடுகாட்டாத பொருட்கள் எவை?


.................................................................................................

3) ஒளி ஊடு கசியும் பொருட்கள் எவை?

.................................................................................................

(2 + 2 + 2 = 06 புள்ளிகள்)
(மொத்தம் 11 புள்ளிகள்)

03. தரம் 6 மாணவர் குழு ஒன்று அமைத்த இசைக்கருவி ஒன்றின் அமைப்பைப் படம் காட்டுகிறது.



1) இதனை அமைக்க மாணவர்கள் பயன்படுத்தியுள்ள பொருட்கள் எவை?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

2) இவ்விசைக்கருவி எவ்வாறு ஒலி எழுப்புகிறது?

.................................................................................................


kalvi.lk

3) இவ்விசைக்கருவி ஒலி எழுப்பும் முறை போன்று ஒலியைப் பிறப்பிக்கும் கருவிகள் 2 தருக.

1) ........................................................ 2) ........................................................

4) உமது பாடசாலை விளையாட்டுப் போட்டியில் அணிநடையின் போது இசைக்கப்படும் இசைக்கருவிகளில்

i) தோற்கருவி ஒன்று தருக.

........................................................................................................................

ii) காற்றுக்கருவி ஒன்று தருக.

........................................................................................................................

5) இசை ஒலி என்றால் என்ன?

........................................................................................................................

6) நீர் அவதானித்த இசை ஒலி ஒன்று தருக.

........................................................................................................................

7) செவிப் பாதுகாப்புக் கருவிகளின் பயன்பாடு யாது?

........................................................................................................................

........................................................................................................................

(3 + 1 + 2+ 1+ 1 + 1 + 1 + 1 = 11 புள்ளிகள்)

**04. எமது சூழலிலுள்ள அங்கிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.**

**(தென்னை, மீன், வண்ணத்துப்பூச்சி, பப்பாசி, பரமேசியம், அன்னம், புல், பக்ரீரியா, மண்புழு)**

1) மேல் தரப்பட்டுள்ள அங்கிகளை கீழ் காட்டியவாறு வகைப்படுத்துக.

| தாவரங்கள் | விலங்குகள் | நுண்ணங்கிகள் |
|---|---|---|
| .................................... | .................................... | .................................... |
| .................................... | .................................... | .................................... |
| .................................... | .................................... | .................................... |
| .................................... | .................................... | .................................... |

2) இவ்வங்கிகளின் பொதுவான சிறப்பியல்புகள் 2 தருக.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................



kalvi.lk

3) நுண்ணங்கிகளை எவ்வுபகரணத்தின் மூலம் அவதானிக்க முடியும்?

..............................................................................................................................................

4) கீழுள்ள இணைக்கவர்ச் சுட்டியைப் பூரணப்படுத்துக.

பூனை, சிலந்தி, மண்புழு, மாடு, கோழி

கால்கள் அற்றவை | 1) [ ]

2) ........................

பூனை, சிலந்தி, மாடு, 3) ..........................

சிறகுகள் உடையவை | 4) [ ]

5) ............................

பூனை, சிலந்தி, 6) ..........................

உரோமம் உடையவை | 7) [ ]


பூனை, 8) .............................. | சிலந்தி

கொம்பு உடையவை | 9) [ ]

10) .................................. | பூனை

( 3 + 2 + 1+ 5 = 11 புள்ளிகள்)

05. பல்வேறு வடிவக் காந்தங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.



A B C D

1) இக்காந்தங்களை இனங்கண்டு பெயரிடுக.

A) .................................................. B) ...................................................................

C) .................................................. D) ...................................................................

2) காந்தத்தின் முனைவுகள் இரண்டும் எவை?

1) .................................................. 2) ...........................................................

Education கல்வி




kalvi.lk

3) மரத்தாங்கி, நூல், சட்டக்காந்தம் என்பன உமக்குத் தரப்பட்டுள்ளன. காந்த முனைவுகளை இனங்காண்பதற்காக இப்பொருட்களை ஒழுங்கமைக்கும் முறையைப் படத்தில் காட்டுக.

4) காந்தமொன்றைச் சூழ்ந்து காணப்படும் காந்தவிசைக் கோடுகளின் அமைப்பை வரைந்து காந்த முனைவுகளையும் பெயரிடுக.

Education கல்வி அධ්‍යාපන

5) 


a) படத்தில் காட்டியவாறு இரு விளையாட்டுக் கார்களையும் அருகே கொண்டு செல்லும் போது உமது அவதானம் யாது?

..........................................................................................................................................

b) இவ் அவதானத்திற்கான காரணம் யாது?

..........................................................................................................................................

6) காந்தம் பயன்படுத்தப்படும் உபகரணமொன்றைப் பெயரிடுக.

..........................................................................................................................................

(2 + 2 + 2 + 2 + 1 + 1 + 1 = 11 புள்ளிகள்)


kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page